இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 16-11-2024

# அநியாயத்தை இடித்த உச்சநீதிமன்றம்

பா.ஜ.க.வின் 'புல்டோசர்' அரசியலை இடித்துத் தள்ளி இருக்கிறது உச்சநீதிமன்றம். உத்தரப்பிரதேச பா.ஜ.க. மாநில அரசின் அக்கிரமத்தை, அநியாயத்தை, கொடூரத்தை இடித்துத் தள்ளிவிடும் தீர்ப்பை வழங்கி இருக்கிறது உச்சநீதிமன்றம்.

தனது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க அவர்கள் மீது வழக்குகள் போட்டு, அவர்களது வீடுகளை இடிப்பதையே சட்டபூர்வமாகச் செய்து வந்தார் பா.ஜ.க.வின் உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சர் ஆதித்யநாத். இதே பாணியை பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேசமும், குஜராத்தும், அரியானாவும் பின்பற்றியது.

இறைத்தூதர் முகமது நபியை விமர்சித்து பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர்கள் நுபுர் சர்மா, நவீன் குமார் ஜிண்டால் ஆகியோர் பேசினார்கள். இதனைக் கண்டித்து உத்தரப் பிரதேசத்தில் 2022 ஆம் ஆண்டு போராட்டம் நடந்தது. 304 பேர் கைது செய்யப்பட்டனர். அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட நான்கு பேரின் வீடுகளை ஆளும் பா.ஜ.க. அரசே இடித்துத் தள்ளியது.

சாரன்பூர் என்ற இடத்தில் நடந்த போராட்டம் தொடர்பாக முசாமில் மற்றும் அப்துல் வாகிர் ஆகியோரின் வீடுகள் புல்டோசர் மூலம் இடிக்கப்பட்டது. பிரயாக்ராஜ் பகுதியில் நடந்த போராட்டம் தொடர்பாக ஜாவித் முகமது என்பவரின் வீட்டின் முன்பகுதிகள் இடிக்கப்பட்டன. இவர்கள் போராட்டம் தொடர்பாக கைதாகி சிறையில் வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலையில் நிலத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியிருப்பதாகக் கூறி வீட்டை இடித்தார்கள்.

கான்பூர் போராட்டத்தில் முக்கியக் குற்றவாளியாகக் கருதப்படும் ஜாபர் ஹயத்தின் நெருங்கிய உறவினர் முகமது இஷ்தியாக்கின் ஸ்வரூப் நகர் வீட்டின் முன்புறம் இடிக்கப்பட்டது. உத்தரப் பிரதேசத்தில் மொத்தம் 7 இடங்களில் வன்முறை நடந்துள்ளதாகவும் அதற்குக் காரணமானவர்கள் இவர்கள் தான் என்றும் சொல்லி இந்த நான்கு பேரின் வீடுகள் இடிக்கப்பட்டன.

உ.பி. முதலமைச்சர் ஆதித்யநாத்தின் ஊடக ஆலோசகர் ம்ரித்யுஞ்ஜய குமார் தனது 'ட்விட்டர்' பக்கத்தில், புல்டோசரைக் கொண்டு வீடுகளை இடிக்கும் படத்தை பகிர்ந்து, 'ஒவ்வொரு வெள்ளிக்கிழமைக்கும் அடுத்த நாள் சனிக்கிழமை வரும்' என எச்சரித்து இருந்தார்.

டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கப் பிரதிநிதியும், மாணவர் செயற்பாட்டாளருமான ஆஃப்ரின் பாத்திமாவின் வீட்டையும் உத்தரப்பிரதேச அரசு இடித்துத் தள்ளியது. உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் நகரில் உள்ளது அஃப்ரீன் பாத்திமா வீடு. இவரது தந்தை ஜாவேத் முகமது 'வெல்ஃபர் பார்ட்டி ஆஃப் இந்தியா' என்ற கட்சியின் தலைவர். பிரயாக்ராஜில் நடந்த போராட்டத்தில் வெடித்த வன்முறைக்கு சதித்திட்டம் தீட்டியதாக ஜாவேத் மீது அரசு குற்றம்சாட்டியது. முந்தைய நாள் இரவு, அவர்களுக்கு ஒரு தாக்கீது கொடுக்கப்படுகிறது. "நாளை காலையில் உங்கள் வீட்டை இடிக்கப் போகிறோம்" என்று சொல்லி விட்டு, மறுநாள் காலையில் இடித்தார்கள்.

2022 ஏப்ரல் 16 அன்று டெல்லியில் ஜஹாங்கீர் பகுதியில் புல்டோசர் நுழைந்தது. இசுலாமியர்கள் வீடுகளை இடிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான பிருந்தா காரத் களத்தில் இறங்கிப் போராடினார். உச்சநீதிமன்றத்துக்கு பிரச்சினையை எடுத்துச் சென்றார். வழக்கும் தாக்கல் செய்தார். மேலும் பலர் வழக்குகளைத் தாக்கல் செய்தார்கள்.

ஜனநாயக சக்திகளை ஒடுக்குவதற்கு இது ஒருவிதமான வழிமுறையாக பா.ஜ.க. மாநில அரசு பின்பற்றி வருகிறது. இதற்கு எதிராக உத்தரவுகள் பிறப்பிக்குமாறு உச்சநீதிமன்றத்துக்கு ஓய்வு பெற்ற நீதிபதிகள், மூத்த வழக்கறிஞர்கள் கடிதம் எழுதினார்கள். உச்சநீதிமன்றம், தானாக முன் வந்து விசாரிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். பா.ஜ.க.வின் புல்டோசர் அநீதி நடவடிக்கைகளை இடித்துத் தள்ளும் தீர்ப்பை உச்சநீதிமன்றம் வழங்கி இருக்கிறது.

**"ஒரு வழக்கில் குற்றவாளி எனக் குற்றம் சாட்டப்பட்டவர் அல்லது தீர்ப்பளிக்கப்பட்டவர் என்பதற்காக அவரது வீட்டையோ அவருக்குச் சொந்தமான கட்டடங்களையோ இடிப்பது அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது. இத்தகைய அளவுக்கு மீறிய அதிகாரங்களுக்கும், தான் தோன்றித்தனமான நடவடிக்கை களுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் இடமில்லை. அரசியல் ஆட்சியாளர்களின் இது போன்ற அத்த நடவடிக்கைகளை சட்டத்தின் கரம் கொண்டு கையாள வேண்டும்." என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.ஆர்.கவாய், கே.வி.விஸ்வநாதன் அமர்வு (13.11.2024) தீர்ப்பளித்துள்ளது.**

**"இந்தியா மதச்சார்பற்ற ஒரு நாடு. இந்த வழக்கில் நாங்கள் என்ன தீர்ப்பு அளித்தாலும், அதை அனைத்துக் குடிமக்களுக்காகவும், அனைத்து நிறுவனங்களுக்காகவும் வைக்கிறோம். ஒரு குறிப்பிட்ட மதத்துக்கு ஒரு சட்டம் இருக்க முடியாது" என்று நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளார்கள். "சட்டத்தின் ஆட்சியும் குடிமக்களின் உரிமைகளும் நிர்வாகத்தின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிரானவை. அத்தகைய தன்னிச்சையான நடவடிக்கைகளை சட்டம் மன்னிக்காது. சட்டமீறல்கள் சட்டவிரோதத்தை ஊக்குவிக்கும்." என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.**

**"அரசு அதிகாரிகள் தங்களை நீதிபதிகள் போன்று நினைத்துக் கொண்டு குடிமக்கள் மீது இது போன்ற நடவடிக்கையை மேற்கொள்வது கண்டிக்கத்தக்கது. அவர்கள் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்" என்று நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.**

அதிகாரிகளை ஏவியது பா.ஜ.க. ஆட்சியாளர்கள் அல்லவா? உத்தரப் பிரதேசம், அரியானா, உத்தரகண்ட் மாநில முதலமைச்சர்களும், டெல்லி துணை நிலை ஆளுநரும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு அவர்கள் தலைவணங்கி தங்களது தவறான நடவடிக்கைகளை சமப்படுத்துவார்களா?



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2024) அரியலூர் மாவட்டம், வாரணவாசி குழந்தைகள் மையத்தில், தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடுகளை களையும் நோக்குடன் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடி திட்டமான 'ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கி வைத்து, தாய்மார்களுக்கு நெய், பேரிச்சம்பழம், ஊட்டச்சத்து மாவு (Health Mix), இரும்புச்சத்து டானிக், பருத்தி துண்டு (Towel), பிளாஸ்டிக் பக்கெட் மற்றும் கப் ஆகிய பொருட்களை கொண்ட ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல். திருமாவளவன், ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் க.சோ.கா. கண்ணன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ. இரத்தினசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2024) அரியலூர் மாவட்டம், வாரணவாசி குழந்தைகள் மையத்தில், தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடுகளை களையும் நோக்குடன் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடி திட்டமான "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கி வைத்து, தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கி, குழந்தைகளை கொஞ்சி மகிழ்ந்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2024) அரியலூர் மாவட்டம், வாரணவாசி குழந்தைகள் மையத்தில், "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை தொடங்கி வைத்து, அங்கன்வாடி குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிகுந்த தின்பண்டங்களை வழங்கினார்.

## அரியலூர் – வாரணவாசி குழந்தைகள் மையத்தில் ரூ.22 கோடியில்

# 'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டத்தின் 2-ஆம் கட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**அரியலூர், நவ. 16 -**

**"ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் இரண்டாம் கட்டம் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர் மாவட்டம், வாரணவாசி குழந்தைகள் மையத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2024) அரியலூர் மாவட்டம், வாரணவாசி குழந்தைகள் மையத்தில், தமிழ்நாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடுகளை களையும் நோக்குடன் செயல்படுத்தப்பட்டு வரும் முன்னோடி திட்டமான "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கி வைத்து, தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்.

ஆரோக்கியமான குழந்தைகளே, நாட்டின் வளமான எதிர்காலம் என்பதைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 7.05.2022 அன்று சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை நலமுடன் வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன், பரந்துபட்ட அளவில் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்ய இருக்கிறோம் என்றும், மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் ஒன்றும் ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது என்றும் அறிவித்தார்.

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மற்றும் சுகாதாரத்துறை ஒன்றிணைந்து, 6 வயதிற்குட்பட்ட குழந்தை களில் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு, மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தைகள் மற்றும் ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகள் ஆகியோரைப் பிரித்தறிந்து, குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டினை நீக்க 'ஊட்டச்சத்தை உறுதி செய்' என்ற புதிய திட்டத்தை நீலகிரி மாவட்டம், தொட்டபெட்டா ஊராட்சி முத்தோரை குழந்தைகள் மையத்தில் 21.5.2022 அன்று முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் மூலம் தீவிர ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்களாக கண்டறியப்பட்ட குழந்தைகளில் சுமார் 77.3% குழந்தைகள் இயல்பு நிலைக்கு திரும்பி உள்ளனர் என்று குறிப்பிடத்தக்கது.

பிறந்தது முதல் ஆறு மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கு தாய்ப்பால் மட்டுமே உணவாக வழங்கப்பட வேண்டும். ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளின் தாய்மார்களின் உடல் நலம் பேணினால் மட்டுமே, குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்த முடியும். எனவேதான், தற்போது 76,705 ஊட்டச்சத்து குறைபாடு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ள 06 மாத குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை அவர்களின் வீட்டிற்கே சென்று வழங்குவதோடு மட்டுமல்லாமல், குழந்தைகளின் நிலையை தொடர்ந்து கண்காணிக்கும் "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் இரண்டாம் கட்டம் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படும்.

முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் அரியலூர் மாவட்டம், வாரணவாசி குழந்தைகள் மையத்தில் "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை தொடங்கி வைத்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் அமைக்கப்பட்ட ஊட்டச்சத்து உணவுகள் பற்றிய கண்காட்சி அரங்கத்தினை பார்வையிட்டு, அரங்கத்தில் வைக்கப்பட்டிருந்த ஊட்டச்சத்து உணவுகளை சுவைத்துப் பார்த்தார். பின்னர், அங்கன்வாடி குழந்தைகளுக்கு மாப்பிள்ளை சம்பா, தூயமல்லி, வரகு முறுக்குகள், கருப்புகவுனி மற்றும் தூயமல்லி அதிசரங்கள், திணை லட்டு ஆகிய ஊட்டச்சத்து மிகுந்த தின்பண்டங்களை வழங்கி, அவர்களுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார். இப்பெட்டகமானது, நெய், பேரிச்சம்பழம், ஊட்டச்சத்து மாவு, இரும்புசத்து டானிக், பருத்தி துண்டு (Towel), பிளாஸ்டிக் பக்கெட் மற்றும் கப் ஆகிய பொருட்களை கொண்டது. ஊட்டச்சத்து பெட்டகங்களை பெற்றுக்கொண்ட தாய்மார்கள் முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

"ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் இரண்டாம் கட்டம் தொடங்கப்பட்ட இன்றையதினமே அனைத்து மாவட்டங்களிலும், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டத்தை தொடங்கி வைத்து, ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்குவார்கள்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொல். திருமாவளவன், ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர் க.சோ.கா.கண்ணன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**ம**ரத்தை வெட்டுகிற வன்கூட களைத்துப் போனால் ஓய்வெடுக்க இன்னோரு மரத்தின் நிழலில்தான் அமர்கிறான். "நம்மையும் இவன் வெட்டுவானே" என்று நினையாமல் அம்மரம் நிழலளிக்கும். அதுபோல பொது வாழ்வில் நம்மைத் தாக்குவோரிடத்திலும் நிழல் தரும் மரம் போல் அன்பு காட்டுவோம்.

**- பேரறிஞர் அண்ணா**



முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அரியலூர் மாவட்டத்தில் "ஊட்டச்சத்தை உறுதிசெய்" திட்டத்தை தொடங்கி வைத்ததை முன்னிட்டு வேலூர் மாவட்டம் காட்பாடி சட்டமன்றத் தொகுதி செம்பராய நல்லூரில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், மண்டல குழு தலைவர் புஷ்பலதா, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சுலோச்சனா கிருபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.